**மறுப்பு அபிப்பிராயம்**

கப்பற்துறை அபிவிருத்தி நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு செயலாற்றல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கங்கள் காரணமாக நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயமொன்று வழங்கவில்லை. 2018 திசெம்பர் 31 இல் நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு செயலாற்றல் கூற்று தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயமொன்றுக்காக அடிப்படையொன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன்.

**1.1 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்தை மறுப்பதற்காக அடிப்படையொன்றை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளிவும் பொருத்தமானது என்பது எனது நம்பிக்கையாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளரின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால்கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு

எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பினிவருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதாஎனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

---

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

---

கொடுக்கல் வாங்கல்கள் முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்ளுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வதற்கு போதியளவு “முறையாக திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக் கொள்வதற்காக அவசியமாகவுள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமத்திற்குரிய தொடர்புடைய இணக்கமின்மை | முகாமைத்துவத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 1 இன் 38 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற நிலைமை காணப்படுவதை முகாமைத்துவம் அறிந்திருக்கும் போது அந் நிச்சயமற்ற தன்மைகளை கையாளுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் நிதியத்தின் தொடர்ந்தியங்குதல் தொடர்பாக காணப்பட்ட நிச்சயமற்றதன்மை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆகஸ்ட் 18 ஆந் திகதிய 2/2018 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியத்தை மூடிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | நிதியத்தின் தொடர்ந்தியங்குதல் தொடர்பாக காணப்படும் நிச்சயமற்றதன்மை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும் |

### 1.5.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

| அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சனாதிபதி செயலகத்திற்கு நிதியத்திலிருந்து வழங்கப்பட்ட ரூபா 366,691,764 தொகை தொடர்பாக எந்தவொரு உறுதிப்படுத்தும் ஆவணமும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் இலங்கை கப்பற்துறை கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 55,000,000 தொகை பொதுத் திறைசேரியால் மீள்நிரப்புதல் அடிப்படையில் எடுக்கப்பட்டிருந்ததுடன் இது இலங்கை கப்பற்துறை கூட்டுத்தாபனத்தின் பொறுப்பொன்றாக இருக்கவில்லை என கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருந்தது. அதற்கிணங்க, நிதிக்கூற்றுக்களில் சொத்துக்களாக காட்டப்பட்ட ரூபா 421,691,764 தொகையான முழுமையான பெறுமதி தொடர்பாக மீதிகளின் உறுதிப்படுத்தல் பெறப்படாமை உரிய நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்களில் பொறுப்பொன்றாக காட்டப்பட்டிருக்கவில்லை. இதனால் பணத்தை அறவிடுவதில் நிச்சயமற்ற நிலைமையொன்று காணப்பட்டது. | 2018 ஆகஸ்ட் 18 ஆந் திகதிய 2/2018 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியத்தை மூடிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | குறித்த அங்கீகாரத்தைப் பெற்று 2/2018 ஆம் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியத்தை மூடிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதியத்தின் தொடர்ந்தியங்குதல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1973 இன் 26 ஆம் இலக்க இலங்கை மத்திய சரக்குப் பணியக அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் கப்பல் முகவர்களிடமிருந்து அறவிடப்பட்ட கட்டணங்கள் மற்றும் தரகுகளைப் பயன்படுத்தி நிதியம் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் கீழ் நியதிச்சட்டமல்லாத நிதியமொன்றாக துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சின் கீழ் தொழிற்பட்டிருந்தது. 2011 மே 24 ஆம் திகதிய பிஈ/சீஓபி/(4)31ஜீஈஎன் ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களக் கடிதத்தின் மூலம் வழங்கப்பட்ட அறிவுரைகளின் பிரகாரம் நிதியத்தில் 46.47 மில்லியன் தொகையொன்று புதிய பிரயாணிகள் முடிவிடம் ஒன்றை அமைப்பதற்கு முதலீடு செய்வதற்காக இலங்கை கப்பற்துறை கூட்டுத்தாபனத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் எஞ்சிய நிதிசார் சொத்துக்கள் 2012 செப்தெம்பர் 10 வரை மாற்றி திரண்ட நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட்டிருந்தது. அத்திகதியின் பின்னர் செயற்பாடுகள் எதுவும் மேற்கொள்ளப்படாமையால் நிதியம் தொடர்ச்சியான நீடிப்பைக் கொண்டிருக்கவில்லை. | 2018 ஆகஸ்ட் 18 ஆந் திகதிய 2/2018 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியத்தை மூடிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | நிதியம் செலற்று இருப்பதால் நிர்ணயிக்கப்பட் நிதியத்தை மூடிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 2.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2016 பாதீட்டு முன்மொழிவின் பிரகாரம் சட்டரீதியான மற்றும் சட்டரீதியல்லாத நிதியத்தினை மீளாய்வு செய்து பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்கான திறைசேரி குழுவின் பரிந்துரை மற்றும் பொருளதார முகாமைத்துவம் தொடர்பான அமைச்சரவை செயற்குழுவின் பரிந்துரையின் பேரில் 2017 ஆகஸ்ட் 09 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது நிதியத்தை மூடிவிடுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.<br>அதன் பிரகாரம் திறைசேரி செயலாளரினால் 2018 ஆகஸ்ட் 18 ஆந் | 2018 ஆகஸ்ட் 18 ஆந் திகதிய 2/2018 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியத்தை மூடிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | 2/2018 ஆம் அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியத்தை மூடிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

திகதி வழங்கப்பட்டிருந்த 02/2018 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை மூலம் நிதியத்தை மூடிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2019 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் நிதியத்தை மூடிவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.